# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059   📠 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை   மாதமிருமுறை   இலவசம்

நிதி: 12   **FEBRUARY 01, 2002**   பாலம்: 03



வெளிவருகின்றது

ஏப்ரல் 13 முதல்

உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

காலாண்டு சஞ்சிகை



ரொறன்ரோவில் எரிமலை தோன்றுமா? (பக்கம் - 02)

பாடல், ஆடல், சண்டை, காதல் அற்றது சினிமா ஆகுமா? (பக்-10)

விருந்தளித்தல் திருமணத்தின் ஒரு பகுதியா? (பக்கம்- 08)

காப்புறுதி செய்பவர்களின் நன்மைக்கு.. (பக்கம்-13)

வேறு ஒரு சூரியக் குடும்பம் சாத்தியமாகுமா? (பக்கம் - 09)

உலககிண்ணத்தை எதிர்பார்க்கும் உலகம் (பக்கம் - 06)

ஒன்ராரியோவில் கணிதக் கல்வி (பக்கம் - 15)

சிறந்தபடம் வெற்றிப்படமாகுமா? (பக்கம் - 07)

வீட்டின் விலையில் மாற்றம் ஏற்படுகிறதா? (பக்கம்-17)



RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

**Raja M. Mahendran, P.Eng.**
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## உன்னை அறிந்தால்

காலத்துடன் எமது வயது அதிகரிப்பது உண்மை. இதுவே இயற்கை. வயது என்பது ஓர் எண்ணிக்கை. இன்றைய காலகட்டத்தில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் குறிப்பாக வடஅமெரிக்காவில் மக்கள் நூறுவயது மட்டும் வாழ்வது என்பது பெரிய விடயமாக இருக்கப்போவதில்லை. விஞ்ஞான வளர்ச்சி மட்டும் இதற்குக் காரணமாகலாமா? எமது உடம்பு ஓர் இயந்திர அமைப்பல்ல. இந்த அமைப்பு காற்றாலும், நேரத்தாலும் உருவாக்கப்பட்டதல்ல. எமது உடம்பு சக்தி (Energy), அறிவு(Intelligence), மாற்றங்கள் (Dynamic Changes) தகவல்கள் (Information ) இதனால் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றை மாற்றுவதால் எமது உயிரியல் வயதை (Biological Age) மாற்ற முடியும் என்பது விஞ்ஞானிகளாலும், மெய் ஞானிகளாலும் கண்ட உண்மை. விஞ்ஞானத்தால் மாற்ற முடியாத பல நோய்கள்/ வியாதிகள் மனித சக்தியால் மாற்றப்பட்டள்ளன. இம்முறையால் எமது உயிரியல் வயதினையும் குறைக்க பல வழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

ஒழுங்கான உடல் பயிற்சியும் தியானமும் நல்ல சிந்தனையுமே இவற்றின் அடிப்படையாகக் கருதப்படுகின்றன. எமக்கு வயதாகி விட்டது என்று தவறுதலாக எண்ணுவதாலே எமது அணுக்களிற்கு பிழையான தகவல்கள் கொடுக்கின்றோம். மறுதலையாக எமக்குத் தெரியாமலே எம்முடைய உடலின் அணுக்களையும் சக்திகளையும் இழப்பதற்கு நாமே காரணமாகி விடுகின்றோம். இதனால் உயிரியல் வயதை குறைக்கக் காரணமாகின்றோம். எனவே சரியான சிந்தனையாலும் தகுந்த நடவடிக்கைகளாலும் பல நல்ல நிகழ்வுகளை நாமே. எமக்கு உருவாக்கலாம் என்பது உறுதிசெய்யப்பட்ட உண்மை.

**நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!**

-நெற்றிக்கண்ணன்

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- இயற்கை முழுவதிலும் இனியதோர் ஒருங்குப் பாடு உண்டு. அந்த ஒழுங்குப்பாடு புரிகின்ற ஆட்சி ஓய்வில்லாதது! அந்த ஆட்சிக்கு அன்பும் நீதியும் அமைச்சர்களாய் அமைந்திருக்கின்றன.
- மனதில் உள்ள கோணல் வெளியுலகில் உள்ள கோணலாக நமக்குத் தோன்றுகிறது, மனதில் உள்ள கோணலை நிமிர்த்திவிட்டால் வெளியுலகில் கோணல் இல்லை என்பதை நாம் உணர்வோம்.
- எல்லாவற்றிலும் நல்லது எது? ஒழுக்கம். ஏனென்றால் ஒழுக்கம் இல்லாதது எதுவும் நல்லதாகிறதில்லை.


Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

**Only $30.00/M + Taxes**

❖ 250 Min. (Free Day Time)
❖ Mon-Thu 7PM - 7 AM இலவசம் ❖ Fri 7PM-Mon 7AM இலவசம்
❖ C/W, W/M, C/F, +C/I இலவசம்
* 6PM-8AM (MON.-FRI) & WEEKENDS) ALSO AVAILABLE

More Info: Pl..Call: Sathi / Raj
Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700
5010 Steeles Ave.., W., Unit 17ABC
Kipling & Steeles - Deliver Arranged*





சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



London Life

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

LIBERTY MUTUAL

© 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975
4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (97)



-விஜே குலத்துங்கம்

கடந்த மாதம் 15ஆம் திகதி ஆபிரிக்காவிலுள்ள 'கொங்கோ' எனனும் நாட்டில் உள்ள 'கோமா' - *Goma* என்ற நகரில் உள்ள எரிமலை ஒன்று வெடித்து தீக்குழம்பைக் கக்கியது. இந்த எரிமலையின் பெயர் *Mont Nyirangonga* என்பதாகும். ஆபிரிக்காவிலுள்ள மிகவும் இயங்கிய நிலையில் - *Active* ஆக இருக்கும் எரிமலைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த எரிமலை கடைசியாக 1994ஆம் ஆண்டு வெடித்து தீக்குழம்பைக் கக்கியது. ஆனால் இம்முறை மிக அதிகமாக தீக்குழம்பைக் கக்கி பெரும் அழிவை ஏற்படுத்தியது. இந்தத் தீக்குழம்பு மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் பாய்ந்து '*Goma*' நகருக்குள் புகுந்தது. 5 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற நேர்ந்தது. இந்த நகரில் 40% மக்கள் வீடுகளை இழந்துள்ளார்கள். பாய்ந்த தீக்குழம்பு இறுகி பாறைகளாகி. வீடுகளில் கூரையளவிற்கு நிரம்பியுள்ளது.




நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

**Vitaplex**

**சம்போ அன்ட் கன்டிஷனர்**

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.




Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

**கிடைக்கும் இடங்கள்**

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்சிஸ்சாகா, எதோபிக்கோ மற்றும் மொன்றியலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.


**விடுகதை**

- எங்கிருந்து வருகிறான் தெரியாது எங்கே போகிறான் அதுவும் தெரியாது அவன் யார்? காற்று
- வண்ணங்களில் உருவானவன் நெற்றிக்கு அமைப்பானவன் அவன் யார்? பொட்டு
- சிலதை தொட்டால் மட்டும் ஒட்டிக் கொள்வான் அவன் யார்? காந்தம்
- அங்கங்கே வெட்டுப்பட்டவன் அழகு வடிவானான் அவன் யார்? சிற்பம்



இவ் இதழில் இந்த எரிமலைகள் எவ்வாறு உருவாகின்றன என்று பார்ப்போம். இதற்கு முதலில் பூமியின் கட்டமைப்பை ஆராய வேண்டும். பூமியும் மற்றைய கிரகங்களைப் போல் சூரியனில் இருந்து பிரிந்து வந்தது. முதலில் தீப்பிழம்பாக எரிந்து கொண்டிருந்த பூமி பின்னர் வெப்பநிலை தணிய மேற்பரப்பு பாறைகளாகின. வெளிப்பரப்பு பாறைகளாகிவிட அவை மேலும் வெப்பம் வெளியேறாதவாறு தடுத்துவிட. உள்புறம் இன்னமும் தீக்குழம்பாகவே உள்ளது. பூமியின் கட்டமைப்பு மூன்று படைகளாகவுள்ளது. இதன் அமைப்பை ஒரு பட்டர் பழம் அல்லது அவகாடோ என்று அழைக்கப்படும் பழத்துடன் ஒப்பிடலாம். பூமியின் நடுவில் பழத்தின் விதையைப் போன்று வன்மையான உலோகப்பகுதி ஒன்று உண்டு. இது *Core*என அழைக்கப்படும். இந்த *Core*இல் இருபடைகள் உண்டு. உள்பகுதி தடித்த வன்மையான உலோகமானது. இதன் அடுத்த படியாக இருப்பது உருகிய நிலையில் உள்ள உலோகப் பகுதியாக இருக்கும். இரண்டாவது படை, பழத்தின் சதைப் பகுதிக்கு ஒப்பாக இருக்கும். இப்பகுதியில் உருகிய பாறை தீக்குழம்பாக இருக்கும். பழத்தின் தோலைப்போன்று, மேற்பகுதியில் இருக்கும் பாறைகளால் ஆன பகுதி, *Crust* என்று சொல்லப்படும். நிலமேற்பரப்புக்கு அடுத்தபடியாக இந்த *Crust* எனப்படும் பகுதி உண்டு. இதில் இரண்டு வகை உண்டு. நிலமேற்பரப்பின் கீழ் இருப்பது *Continental Crust* என்றும் கடலின் கீழே இருப்பது *Oceanic Crust* என்றும் அழைக்கப்படும் . நிலப்பரப்பின் கீழ் உள்ள *Crust* 80 கிலோமீற்றர் தடிப்பாகவும் கடலுக்கு கீழுள்ளது 10 கிலோமீற்றர் வரையிலும் தடிப்புள்ளது.

*Mantle* என்னும் பகுதியில் இருக்கும் தீக்குழம்பு. நடுவில் இருக்கும் அதிகூடிய வெப்பநிலை உள்ள பகுதியால் சூடாக்கப்பட அது பாரம் குறைந்து மேலே கிளம்பும். பூமியின் மேற்பரப்புக்கு அண்மையாகச் செல்ல வெப்பநிலை குறைய. மீண்டும் அடர்த்தி குறைய கீழேயே வரும். இப்படியாக *magma* என்ற தீக்குழம்பு எப்போதும் மேலும் கீழுமாக அசைந்து கொண்டிருக்கும். இவை மிகவும் வேகமாக அசைந்து. அமுக்கம் அதிகரிக்கும் போது பூமியின் மேற்பரப்பில் உள்ள *crust*இன் நலிவடைந்த பகுதியினூடாக வெளியேற முயலும். பூமியின் மேற்பரப்பிலுள்ள இந்த *Crust* முன்னொரு காலத்தில் வெடித்து. இப்போது இது 12 தகடுகளாக உள்ளன. இத் தகடுகள் அசைந்து கொண்டு. ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டு இருக்கும். இந்தத் தகடுகள் பொருந்தும் இடங்களில் பாறைகள் நலிவடைந்து இருப்பதனால் இந்த இடங்களினூடாக தீக்குழம்புகள் வெளியேற முற்படும். வெளியேறும் இந்த உருகிய பாறைகளாலான தீக்குழம்பு வெளியே வந்ததும் வெப்பநிலை குறைய பாறைகளாக மாறும். இப்படி படிப்படியாக தீக்குழம்பு வெளியேறி பாறைகளாக வெளிவந்து கடினமாகும் போது மலையாக உருவாகின்றது. 60 வருடங்களுக்கு முன்னர் மெக்சிக்கோ நாட்டிலுள்ள *Paricutin* என்ற கிராமத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு தோட்டத்தில் தீடிரென்று ஒருநாள் ஒரு வெடிப்பினூடாக தீக்குழம்பு வெளியேறி, ஒரு கிழமையினுள் 500 அடி உயரமான குன்று ஒன்று உருவாகியது. இதேபோல் 60களில் ஜப்பானில் உள்ள *Hokkaido* என்ற இடத்தில் நிலம் மட்டமாக இருந்து. ஒரு நாள் இரவு நடந்த பூமியதிர்வின் பின்னர். மறுநாள் காலை அந்த இடத்தில் ஒரு மலை உருவாகியிருந்தது.

உள்ளேயிருக்கும் தீக்குழம்பு *Magma* எனப்படும். அது வெளியேறி ஓடும்போது அதை *Lava* என்று அழைப்பார்கள். வெளியேறும் *lava*இன் தடிப்பையும் வெளியேறும் விசையையும் பொறுத்து அதனால் உண்டாகும் எரிமலையின் வடிவமும் வேறுபடும். எரிமலையினூடாக *lava* என்ற தீக்குழம்பு வெளியேறும் துவாரம் *Crator* என்று அழைக்கப்படும். இந்த வாசல் ஊடாக எதிர் காலத்திலும் தீக்குழம்பு வெளியேறலாம். ஹவாய் தீவிலுள்ள *Kilauea* என்ற எரிமலை 1983ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து *Active* ஆக புகையை வெளிவிட்டுக் கொண்டும் இடைக்கிடையே தீக்குழம்பை தள்ளிய வண்ணமும் உள்ளது.

கடலுக்கு அடியில் *Crust*இன் தடிப்பு குறைவாக உள்ளதால் நிலப்பரப்பை விடக் கூடுதலான எரிமலைகள் தோன்றுகின்றன. பசுபிக் சமுத்திரத்தில் உ... அதிகமான தீவுகள் எரிமலைகளினாலேயே உருவாகின. ஹவாய் தீவு ஒரு எரிமலையின் மேலாகவே அமைந்துள்ளது. ஓர் எரிமலை வெடிக்கப் போகின்றதென்பதை அந்த இடத்தில் ஏற்படும் பூமியதிர்வை வைத்து தீர்மானிப்பார்கள். சிறிய அளவில் பல அதிர்வுகள் தோன்றும். அதைவிட துவாரத்தினூடாக புகையும் தீக்குழம்பும் வெளியேறும். செய்மதிப் படங்கள் மூலம் வெப்பநிலை அதிகரிப்பையும் அவதானிக்கலாம். இதை வைத்து எரிமலை வெடிக்கப் போவதை முன்னரே கண்டறிந்து, மக்களை வெளியேறும்படி கூறுவார்கள். எரிமலை வெடிப்பின் போது, பாயும் தீக்குழம்பு வீடுகள், கட்டிடங்கள், வீதிகள், தோட்டங்கள் ஆகியவற்றை அழிக்கின்றன. சாம்பல் புகை நிறைந்த வாயுக்களும், நச்சு வாயுக்களும் வளிமண்டலத்தை நிரப்புவதால் மக்கள் மூச்சுத் திணறி இறக்க நேரிடும். கிளம்பும் புகையும் தூசுப்படலமும் பல மைல் தூரத்திற்கு விஸ்தரித்து, சூரிய ஒளி பூமியில் படுவதை தடுப்பதால், பூமியின் வெப்பநிலை குறையும். *Pinatabo* என்ற எரிமலை வெடித்த போது. பூமியின் வெப்பநிலை ½ பாகையால் குறைந்தது.

தீக்குழம்பு குறுகிய காலத்தில் நிலத்தை மூடி அழிவை ஏற்படுத்தினாலும் நீண்ட காலத்தில் இப்பாறைகள் மண்ணாக மாறும் பொழுது கனிப்பொருட்கள் நிறைந்த செழிப்பான மண்ணாக மாறும். இத்தாலியிலுள்ள *Naples* என்ற இடத்தில் நல்ல பயிர்கள் செழித்து வளரக் கூடிய வளமான மண் உண்டு. ஆனால் இந்த இடம் தவிர்ந்த தென் இத்தாலியின் மற்ற பகுதிகளில் சுண்ணாம்பு பாறைகள் காணப்படுவதால் விவசாயம் செய்ய முடியாது. *Naples*இல் முன்பு எரிமலை ஒன்று நீண்ட காலத்தின் முன் வெடித்ததால் வெளிப்பட்ட தீக்குழம்பு உண்டாக்கிய செழிப்பான மண்தான் வெற்றிகரமான பயிர்ச்செய்கைக்கு காரணம்.

நியூசிலாந்து. ஐஸ்லாந்து போன்ற இடங்களில் எரிமலை செயற்பாட்டால் அதிகளவு வெந்நீர் ஊற்றுகள் காணப்படுகின்றன. இந்த வெந்நீர் ஊற்றுகளின் வெப்பசக்தியை உபயோகத்து இந்த நாடுகளில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இப்படியான சக்தியை GEOTHERMAL ENERGY என்று சொல்லுவார்கள். எரிமலை வெடிப்பினால் வைரம் போன்ற விலையுயர்ந்த கற்களும் தங்கம், வெள்ளி, செப்பு. ஈயம். நாகம். பாதரசம் போன்ற உலோகங்களும் காணப்படுகின்றன.

எரிமலை மற்றும் பூகம்பம் போன்ற இயற்கை அழிவுகள் குறைந்த ரொரன்ரோ மாநகரத்தில் இருக்கும் நாங்கள் அதிஷ்டசாலிகள் என்றே கூற வேண்டும்.

*****************************************************


"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - *361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2* என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு *e-mail* ஐ எழுதி அனுப்பவும்.




## உலகத் தமிழர் இயக்க விளையாட்டுப் பிரிவு விடுக்கும் அறிவித்தல்

தமிழ்ச் சிறார்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் முகமாகவும் விளையாட்டு மூலம் நற்பழக்கங்களை போதிக்கும் முகமாகவும் உலகத் தமிழர் விளையாட்டுப் பிரிவினால் கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் பெற்றோர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டுச் சங்கங்கள், விளையாட்டு வீரர்கள், தமிழ்சிறார்களை நல்வழியில் கொண்டு செல்ல விரும்பும் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு விளையாட்டுத் துறையினர் கேட்டுக் கொள்கின்றார்கள்.

சிறுவர்களின் பயிற்சிப் பட்டறையில் முதற்கட்டமாக உதைபந்தாட்டப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது. உலகத் தமிழர் இயக்க விளையாட்டுத் துறையுடன் இணைய விரும்புபவர்களுக்கு இக் கலந்துரையாடலுக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். இக் கலந்துரையாடலில் நீங்கள் யாவரும் பங்கு கொள்வதன் மூலம் தமிழ்ச் சிறார்களின் பயிற்சிப் பட்டறையை நன்கே அமைக்க முடியும் என நம்புகின்றோம்.

**Toronto**
இடம்: 39 Cosentino Dr. (Midland & Consentino)
காலம்: சனிக்கிழமை 9/2/2002
நேரம்: 2:00PM தொடர்புகளுக்கு: 416-318-9471

**Montreal**
இடம்: 4160 VAN HORNE AVE
காலம்: சனிக்கிழமை 16/2/2002
நேரம்: 5.30PM தொடர்புகளுக்கு: 516-131-9124 / 514–735-9984

**Ottawa**
இடம்: 86 Meadow lands Dr.
காலம்: ஞாயிற்றுக்கிழமை 17/2/2002
நேரம்: :2:00PM தொடர்புகளுக்கு: 613-721-3367

## பன்னாட்டுத் தமிழ் நடுவம்



*ஜனவரி 20, 2002இல் காலை 10 மணியளவில் Dr. பஞ்சாட்சரம். Kennedy & 401 இல் அமைந்துள்ள Delta Hotel இல் Whitsides A Conference Room இல் நண்பர்களை அழைத்து ஒரு கூட்டம் ஒன்றை நடத்தினார். New York மாநிலத்தை மையமாக முன் வைத்து தமிழ் நகரம் ஒன்றை அமைப்பதே அதன் திட்டம். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுமார் US $15 (குறைந்தது) அளித்தால் மிகக் குறுகிய காலத்தில் இந் நகரம் அமைக்கப்படும் எனத் தெரிவித்தார். முதலில் சேரும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். கூடுதலான உறுப்பினர்களை சேர்ப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.*

*அ. முத்துலிங்கத்தின் தலைமையில் நடாத்தப்பட்ட இக் கூட்டத்தில் நகரத்துக்கான முன் மாதிரியும் வைக்கப்பட்டிருந்தது. Dr. பஞ்சாட்ச்சரம் எதையும் செய்யும் முடிக்கும் ஆளுமை கொண்டவர். இதன் விபரங்கள் குமுதம், ஆனந்தவிகடன் போன்ற சஞ்சிகைகளிலும் Tamil.Sify.Com என்ற கணணி சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டிருந்தது. அவரது முயற்சிகள் தொடர வாழ்த்துக்கள்.*

## நூல் வெளியீட்டு விழா

*கனேடிய இலக்கிய கோட்டமும் ரொரன்ரோ பல்கலைக்கழகத் தென்னாசிய ஆய்வு மையமும் இணைந்து நடாத்திய நூல் வெளியீட்டு விழா ஜனவரி 19. 2002 சனிக்கிழமை மாலை 6:30 மணிக்கு தேநீர் விருந்துடன். ஸ்காபரோ சிவிக் சென்ரரில் (Scarborough Civic Centre) நடைபெற்றது.*



*செல்வா கனகநாயகம் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் வரலாற்று பேராசிரியர் Milton Israle அவர்கள் தனது பேச்சில் குறிப்பிடுகையில் தங்களைப்போலத் தமிழ் தெரியாதவர்களுக்கு தமிழ்க் கலாசாரத்தை அறிய இந்த நூல் பயன்படும் என்று கூறினார்.*

*Prof. Valentine Daniel உரையாற்றுகையில் கனடாவில் 100 மேற்பட்ட பரத நாட்டிய ஆசிரியர்களும் 3 தொடக்கம் 6 ஆயிரம் மாணவர்களும் பரத நாட்டியம் கற்கிறார்கள். ஆனால் இவர்கள் தமிழை ஆங்கிலத்தில் எழுதியே படிக்கிறார்கள் என்பது கவலைக்குரியது என்பதனைச் சுட்டிக்காட்டினார்.*



*University of Michigan ஐ சேர்ந்த பேராசிரியர் ராம் மகாலிங்கம் அவர்கள். 'இலங்கைத் தமிழ் இலக்கியவாதிகள்' பற்றி உரையாற்றினார்.*

*Dr. Vincent பஞ்சாட்சரம் புத்தகத்தை சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்தார். Dr. Vincent, International Tamil Center Newyork இன் இப்போதைய தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*பல்கலைக்கழகத்தில் 4ஆம் வருடம் கல்வி கற்கும் மாணவி சங்கீதா திவ்வியராஜன். மகாகவியின் 'அகலிகை'. ஊர்வசியின் 'நான் எழுதுவது உங்களுக்கு புரிகிறதா" கவிதைகளைத் தமிழில் வாசித்தார். York Universityஇல் 2ஆம் வருடம் பயிலும் மாணவி கீதா மகாலிங்கம் 'அகலிகை' ஐ ஆங்கிலத்தில் வாசித்தார். உயர்வகுப்பு மாணவி Terase Kvisly இதே அகலிகை கவிதையின் S. சிவசேகரம் அவர்களின் ஆங்கில ஆக்கத்தை வாசித்தார். ரொறன்றோ பல்கலைக்கழக முதலாம் வருட மாணவியான மாதங்கி தில்லை. 'நான் எழுதுவது உங்களுக்குப் புரிகிறதா" கவிதையை ஆங்கிலத்தில் வாசித்தார். இதைத் தொடர்ந்து மித்திரி எகிரிசிங்க 'WarTone Night' என்ற கவிதையை வாசித்தார். வேறு சில உயர்வகுப்பு மாணவர்களும் கவிதைகளை வாசித்தார்கள்.*

*இறுதியாக தம்பித்துரை முத்திலிங்கத்தின் நன்றி நவிலுடன் 'Lutesong and Isment" புத்தக வெளியீட்டு விழா நிறைவேறியேது.*

*-சிவ ஞானம்*



# புதிய வகுப்புகள் (G11, G13) ஆரம்பமாகிறது FEBRUARY 17, 2002

**STARTING FOR 2ND SEMESTER - 2002**



பிரதானமாக; பின்வரும்
**OAC** பாடங்களான

- ⇒ *Algebra* OAC
- ⇒ *Calculus* OAC
- ⇒ *Finite* OAC
- ⇒ *Physics* OAC

பெப்ரவரி மாதத்தில் ஆரம்பித்து, பாடசாலை வேகத்திற்கும் முன்னதாக அனைத்து அலகுகளும் (*All Chapters*) முடிவடைகிறது.

இதில் ***Weekly Quices***
***By Weekly Test***
***Mid Term Exam***
***Final Exam*** என்பன அடங்குகிறது.

பல்கலைக்கழகத்தின் முதல் வருடத்திற்கான பகுதிகளும் இதில் சேர்க்கப்படும். இவற்றுடன் **Grade 11** கணிதமும் ஆரம்பம்.

Pl. Call: **Mr. Sharma ☎: (416) 724-8336**
Engineering Faculty, Waterloo University



## Unpaid Bills
### Keeping You Awake At Night?



Government approved programs can help you-bankruptcy not necessary.
* *Obtain debt relief.*
* *Protect your income and house, car and other assets.*
* *Stop nasty calls from collection agencies.*
* *Stop legal action by creditors.*

Get Peace Of Mind With Qualified Credit Counseling.
Don't Delay. Call Now.

WEST: ☎ - **905-848-0006** Mississauga Office
EAST: ☎ - **416 335-3345** Scarborough Office



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
# சிவ நடராஜா



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**Accident & Traffic Ticket**
(14 Years Insurance Claims Experience)

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave., E.
Suite 223, Scar., Ont.



## NEW Technology
Security and Sound Inc.

Sale and Repair

# FEBRUARY SALE




Start up **$79.99** & up

Pioneer DEH-P3300 CD Player Blowout — Sale $254.99



Alarm & Remote Starter Combo — Start up $189.99 & up

Alarm — Start up $89.99 & up

Blaupunkt CD Player — Sale $174.99

**Mobil Video DVD Much more...**

www.newtechno.net
Tel: 416-335-4070
Shanger Cell (416) 451-4517
We also do any electrical work.
Fax: 416-335-9936

3501 McNicoll Ave., Unit 9, Scarborough, Ont. M1V 2N3

# கனடிய பொருளாதாரம்



## கணக்கியல் பொருளியல்

### 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப்பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்

கடந்த இரு இதழ்களில் வேலைச் சம்பளத்தில் இருந்து எவ்வகையான கழிவுகளை கழிக்கலாம் என்று ஆராய்ந்தோம். இதன் தொடர்ச்சயாக இவ் இதழில் உங்கள் ஓய்வூதியக் காப்புறுதித் திட்டம் (Retirement Saving Plan) பற்றி ஆராய்வோம்.

கனடாவில் மாசி(February) மாதம் என்றால் அது RRSP காலம் என்று எல்லோருக்கும் தெரியும். எனவே இம் மாதத்திற்குரிய இரண்டு இதழ்களிலும் RRSPஐப் பற்றியும் இத் திட்டத்தில் கிடைக்கக் கூடிய நன்மைகளைப் பற்றியும் அத்துடன் RRSPஐப் பற்றி உங்களுக்கு ஏற்படக் கூடிய வினாக்களுக்கான விடையங்களையும் ஆராய்வோம்.

RRSP க்கான முதலீடானது வருடத்தில் எந்த நேரத்திலும் செய்ய முடியும். இதற்கு தை(January). மாசி(February) காலம் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக ஒரு வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே அவ் வருடத்திற்கான பணத்தை வைப்பிலிட்டு வந்தால் அதனால் வருகின்ற சேமிப்பானது ஒரு வருடத்தின் இறுதியிலோ அன்றி அடுத்த வருடத்தின் முதல் 61 நாட்களென்றால் கட்டும் பணத்தின் சேமிப்பைவிட அதிகமாக இருக்கும். இவ்வாறாக மாதாந்தமோ அல்லது கிழமை முறையிலோ RRSPக்கு பணம் வைப்பில் இடும்போது ஒவ்வொரு முறையும் செலுத்தும் தொகை வருட இறுதியில் செலுத்தும் தொகையைவிட சிறியதாக இருக்கும். இதன் மூலம் வைப்பில் இருக்கும் முழுத்தொகைக்கான பணத்தையும் இறுதி நேரத்தில் பெற வேண்டிய தொல்லைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறாக மாதாந்தமோ அல்லது கிழமை முறையிலோ RRSP க்கு பணம் கட்டுவதற்காக கிடைக்கும் பத்திரத்துடன் அரசாங்க வரித் திணைக்களத்திற்கு (CCRA FORMER REVENUE CANADA) விண்ணப்பம் செய்தால் அவர்கள் உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்புவார்கள். இக் கடிதத்தை உங்கள் வேலை இடத்தில் கொடுத்து உங்களது மாதாந்த அல்லது கிழமை சம்பளத்தில் இருந்து கழிக்கப்படும் வரியைக் குறைக்கக் கூடியாதாக இருக்கும்.

எனவே RRSPக்கு உரிய வருடாந்த முதலீட்டை வருட ஆரம்பத்தில் இருந்தே செலுத்தி வருவதனால் உங்களது சேமிப்பு பல மடங்காகி பெருகுவது மட்டுமன்றி இதன் மூலம் உங்களுக்கு அரசாங்கத்தில் இருந்து கிடைக்கும் வரி மிகுதிப் பணத்திற்காக (Tax Refund) வருடாந்த வருமான வரிப் பத்திரங்கிளைப். பூர்த்தி செய்து அனுப்பிவிட்டுத்தான் காத்திருக்க வேண்டிய அவசியவில்லை.

மீண்டும் அடுத்த இதழில் RRSP பற்றி ஏற்படக் கூடிய வினாக்களுக்கான விடயங்களை எதிர்பார்க்கலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஏற்படும் சந்தேகங்களை நீங்கள் தெரியப்படுத்தினால் அதற்கான பதில்களை தரக் கூடியதாக இருக்கும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**
**e-mail: mark.markandu.cga@on.aibn.com**

* * * * * *

**பொது அறிவுக் குறிப்புகள்**

- ரியால் (Rial) ஈரான் நாட்டு நாணயம்.
- ஆஸ்திரேலியா தங்க ஆட்டு ரோம நாடு (The Land of Golden Fleece)

தமிழர் நிர்வாகத்தில்

ஒரு



# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



சமோசாவிற்கு அழையுங்கள்
T.P 416-332-0944
5 SAMOSA $1.00

Embassy அமைந்துள்ள இடம்: FINCH / MIDDLEFIELD,
520‑ ‑INCH AVE., SCARBOROUGH. ☎: (416) 332-8451

# விளையாட்டுத் தகவல்கள்



-எஸ். கணேஷ்

## 777 ஆட்டங்களைத் தாண்டி வரும் உலகக் கிண்ணம்!!!

உதைபந்தாட்டம்

அனைவரும் எதிர்பார்த்திருக்கும் World Cup உதைபந்தாட்டம் மே மாதம் 31ஆம் திகதி 1998ஆம் ஆண்டு World Champion ஆன France உம் உலகக் கிண்ண சரித்திரத்தில் முதன் முதலாக தெரிவாகியிருக்கும் Senegal என்ற நாட்டுடன் மோதி முதல் ஆட்டம் ஆரம்பமாக இருக்கின்றது. இறுதியாட்டம் முதன் முதலாக இரண்டு தடவைகள் யூன் 29ஆம் திகதியும் 30ஆம் திகதியும் கொரியாவிலும் ஜப்பானிலும் நடைபெற உள்ளது. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகளில் கடந்த நான்கு வருடமும் 777 ஆட்டங்களில் 2452 கோல்கள் போடப்பட்டு 193 நாடுகள் மோதி இறுதியாக 32 நாடுகள் 8 Group ஆக தலா 4 நாடுகள் விகிதம் தெரிவாகியுள்ளன. கடந்தி 4 வருடங்களில் 24 - August - 2001 தெஹ்ரான் இல் Iran vs Saudi Arabia உம் மோதிய போட்டியில் ஆகக் கூடிய அளவு 120.018 (ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட இரசிகர்கள் கண்டு களித்துள்ளனர். மொத்தமாக 777 ஆட்டங்களிலும் 17 Million பார்வையாளர்கள் கண்டு களித்துள்ளனர்.

இறுதிச் சுற்றில் 32 நாடுகள் 64 ஆட்டங்களில் மோத இருக்கின்றன. உலக கிண்ணத் தெரிவில் அவுஸ்தரேலியாவும் அமெரிக்கன் சமோலா என்ற நாடும் மோதிய போட்டியில் உலக சாதனையாக 31 - 0 என்ற கோல்கள் போட்டு அவுஸ்திரேலியா வெற்றியீட்டியது. Archie Thompson என்னும் அவுஸ்திரேலிய வீரர் 13 கோல்களைப் போட்டு சாதனை படைத்துள்ளார். நபீபியாவும், எகிப்தும் மோதிய போட்டியில் 177 செக்கனில் 3 கோல்களைத் தொடர்ந்து Abdel Hamid என்ற எகிப்திய வீரர் போட்டு Fastest Hat - Trick என்ற சாதனையும் ஏற்படுத்தியுள்ளார்.

நடைபெற இருக்கும் இறுதிச் சுற்றின் விபரங்களை இங்கு பார்ப்போம். மீதியை அடுத்த இதழில் பார்க்கலாம்.

2002 FIFA World Cup Korea/Japan™

## 2002 FIFA World Cup Korea/Japan™

Korea

| Group A | Group B | Group C | Group D |
|---|---|---|---|
| France | Spain | Brazil | Korea Republic |
| Senegal | Slovenia | Turkey | Poland |
| Uruguay | Paraguay | China PR | USA |
| Denmark | South Africa | Costa Rica | Portugal |

### 1st STAGE – Group Matches

| Date | | Match | Group | Venue | Time | Team | | Team |
|---|---|---|---|---|---|---|---|---|
| Friday | 31.05.02 | 1 | A | Seoul | 20:30 | France | vs | Senegal |
| Saturday | 01.06.02 | 2 | E | Niigata | 15:30 | Republic of Ireland | vs | Cameroon |
| | | 3 | A | Ulsan | 18:00 | Uruguay | vs | Denmark |
| | | 4 | E | Sapporo | 20:30 | Germany | vs | Saudi Arabia |
| Sunday | 02.06.02 | 7 | F | Ibaraki | 14:30 | Argentina | vs | Nigeria |
| | | 6 | B | Busan | 16:30 | Paraguay | vs | South Africa |
| | | 5 | F | Saitama | 18:30 | England | vs | Sweden |
| | | 8 | B | Gwangju | 20:30 | Spain | vs | Slovenia |
| Monday | 03.06.02 | 9 | G | Niigata | 15:30 | Croatia | vs | Mexico |
| | | 10 | C | Ulsan | 18:00 | Brazil | vs | Turkey |
| | | 11 | G | Sapporo | 20:30 | Italy | vs | Ecuador |
| Tuesday | 04.06.02 | 12 | C | Gwangju | 15:30 | China PR | vs | Costa Rica |
| | | 13 | H | Saitama | 18:00 | Japan | vs | Belgium |
| | | 14 | D | Busan | 20:30 | Korea Republic | vs | Poland |
| Wednesday | 05.06.02 | 15 | H | Kobe | 15:30 | Russia | vs | Tunisia |
| | | 16 | D | Suwon | 18:00 | USA | vs | Portugal |
| | | 17 | E | Ibaraki | 20:30 | Germany | vs | Republic of Ireland |
| Thursday | 06.06.02 | 20 | A | Daegu | 15:30 | Denmark | vs | Senegal |
| | | 19 | E | Saitama | 18:00 | Cameroon | vs | Saudi Arabia |
| | | 18 | A | Busan | 20:30 | France | vs | Uruguay |
| Friday | 07.06.02 | 21 | F | Kobe | 15:30 | Sweden | vs | Nigeria |
| | | 22 | B | Jeonju | 18:00 | Spain | vs | Paraguay |
| | | 23 | F | Sapporo | 20:30 | Argentina | vs | England |
| Saturday | 08.06.02 | 24 | B | Daegu | 15:30 | South Africa | vs | Slovenia |
| | | 25 | G | Ibaraki | 18:00 | Italy | vs | Croatia |
| | | 26 | C | Seogwipo | 20:30 | Brazil | vs | China PR |
| Sunday | 09.06.02 | 27 | G | Miyagi | 15:30 | Mexico | vs | Ecuador |
| | | 28 | C | Incheon | 18:00 | Costa Rica | vs | Turkey |
| | | 29 | H | Yokohama | 20:30 | Japan | vs | Russia |
| Monday | 10.06.02 | 30 | D | Daegu | 15:30 | Korea Republic | vs | USA |
| | | 31 | H | Oita | 18:00 | Tunisia | vs | Belgium |
| | | 32 | D | Jeonju | 20:30 | Portugal | vs | Poland |
| Tuesday | 11.06.02 | 33 | A | Incheon | 15:30 | Denmark | vs | France |
| | | 34 | A | Suwon | 15:30 | Senegal | vs | Uruguay |
| | | 35 | E | Shizuoka | 20:30 | Cameroon | vs | Germany |
| | | 36 | E | Yokohama | 20:30 | Saudi Arabia | vs | Republic of Ireland |


CARRIER OPPORTUNITIES

LAUNCH AN EXCITING CAREER WITH ONE OF CANADA'S RESP LEADERS

BECOME A HERITAGE ENROLMENT OFFICER AND ENHANCE YOUR FUTURE AS WELL AS THE FUTURE OF CHILDREN.

WE NEED SELF-MOTIVATED INDIVIDUAL DEDICATED TO HELPING PARENTS START REGISTERED EDUCATION SAVINGS PLANS (RESPS) FOR THEIR CHILDREN.

WE OFFER FLEXIBLE WORKING ARRANGEMENTS AND GROWTH OPPORTUNITIES WITHIN OUR NATIONAL, INDEPENDENT AGENCY NETWORK. CONTACT ME.

Heritage
Scholarship Trust Plan

TODAY FOR MORE EMPLOYMENT INFORMATION
MRS. D. RAJA ☎: (416) 756-3409

துர்க்கை அம்மன் ரூர்ஸ்



ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு
மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு
அழையுங்கள்
☎ 416-283-3969
☎ 416-287-2824
மொன்றியல்
☎ :514-344-2591

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ்த் திரைப்படங்கள்

–தொகுப்பு - பரம்

### 2001 சிறந்த சினிமா... சிறப்புகள்

சென்றவாரத் தொடர்ச்சி....



பேராசிரியர் கமலின் வழியைத் தேர்ந்தெடுத்து பி.எச்.டி. பண்ணிக் கொண்டிருக்கும் மாணவர்களில் அஜித் ஒருவர். திறமை வாய்ந்த 'சிட்டிசன்' என்ற பெயர் எடுத்திருக்கும் இவர் சிட்டிசனாக சின்சியராக உழைத்திருந்தாலும் நெஞ்சில் நின்றவன் மீனவன் சுப்பிரமணிதான். இந்த சுப்பிரமணியை 'தீனா' சுலபமாக ஓரம் கட்டிபபோது நமக்கு வியப்பு வந்தது. இந்த மகாமுரடன் 'சின்னா'வாக 'பூவெல்லாம் உன் வாசம்' இல் ஒரு காட்சியில் நம்மை கலங்கடித்திருந்தான். வீட்டை விட்டு போகவேண்டும் என்று தந்தையிடம் மன்றாடிய காட்சியை மறக்க முடியவில்லையே!



அடுத்தவர் 'பத்ரி'. பேராசிரியர் விஜய்காந்தின் வழியில் வந்து கொண்டிருப்பவர். சண்டைக் காட்சிகளில் கால்களால் சிலம்பமாடும் வித்தை தெரிந்தவர். வென்றாக வேண்டும் என்ற வெறியுடன் பயிற்சியில் ஈடுபட்டு 'பத்ரி' 'கிக் பாக்சிங்' (Kick Boxing)இல் இறங்கியபோது பாலத்தில் ரெயில் போகும் போது எழுகின்ற 'தடக் தடக்' ஓசையாக நமது மனது துடித்தது உண்மை. அது படத்தின் கடைசி 15 நிமிட நேரத்தில்! பிரியமானவளே விஜயைப் 'பத்ரி'உம் வெல்வான் என்று எதிர்பார்த்தோம். 'ஷாஜகானாலும்' முடியவில்லை!



இளைய தலைமுறையினரில் இவரைப் போல் நடனமாடக் கூடிய நடிகர் வேறு எவருமில்லை என்று ரொப் ஸ்டார் பிரசாந்தை சொல்லலாம். கடந்த ஆண்டில் ஆற்றலுக்கு தகுந்த வேடம் கிடைக்கவில்லை. கவரும் வகையில் மனதை ஆட்கொள்ளும் விதத்தில் கதையும் காட்சி அமைப்புகளும் இவரின் படங்களில் இல்லை என்பது உண்மை!

அண்ணன், தம்பி பாசம், பங்காளிகள் பகை, ஏழை - பணக்கார காதல் இப்படியாக ஒரு வட்டம் அமைத்துக் கொண்டு வந்த படங்களில் பேராசிரிய நடிகர்கள் நடித்திருந்ததால் அந்தப் படங்கள் மக்கள் மனதை கவர்ந்தன. அனுபவம் எதிரொலித்திருந்தது. அதே போல் ஆக்ரோஷம், யதார்த்தம், காதல் என்று இளைய தலைமுறையினர் நடித்திருந்த படங்களும் வெற்றி பெற்றன. இதனால் புதிய சிந்தனையுடன் துணிந்து இறங்கிய இயக்குநர்கள் வெற்றி பெறமுடிந்தது. இயக்குநர் 'தரணி'யின் 'தில்' அதற்கு நல்ல உதாரணம்! கனகவேல் கரக்டர் விக்ரமுக்கு கச்சிதமாக பொருந்தியிருந்தது. காவல்துறை அதிகாரியாக வரவேண்டும் என்று விரும்பிய வாலிபன் எந்த அளவு மூர்க்கமானவனாக மாறநேர்ந்தது என்பதை விக்ரம் பிரமாதமாகப் பிரதிபலித்திருந்தார்.



"இல்லப்பா. இனிமேலும் சும்மா இருக்க முடியாது. வீட்ல ஒரு ஓரமாபடுத்துக்கெடன்னு சொல்வீங்க வீட்ல இல்லாத நேரமா வந்து அடிச்சுப் போட்டுப் போயிருக்கான். பொட்டப்பய. எங்கள மாதிரி இளைஞர்கள் தட்டிக் கேட்கப் போறப்ப [illegible]க்காதீங்கப்பா" என்று விக்ரம் அக்னி பிளம்பாக [illegible]ம்பும் காட்சியில் நரம்புகள் முறுக்கேறியதை மறக்க முடியவில்லை!

இப்படி ஆவேசத்தை அள்ளிக் கொண்டு சுழன்றடித்த ஊழிக்காற்று 'காசி' இல் எப்படி உக்கிரம் மறந்து தென்றலாக மாறியது! கண்கள் தெரியாத காசி அப்பா. அம்மா. அண்ணன். தங்கை இந்த நால்வரையும் கொண்ட குடும்பத்தை இழுத்துச் செல்ல வேண்டிய கடமை உணர்வு. 'கண் அவிந்த போய் விட்டோம். அண்ணன். ஆத்தா. தங்கை இவங்கள் எல்லாம் கண்ணோட இருங்காங்க. அவங்க காப்பத்தட்டுமே குடும்பத்தை' என்று முடங்கிக் கிடக்காமல் பொறுப்பேற்று சுமந்து செல்லும் 'காசி'யாகவே வாழ்ந்திருக்கிறார் விக்ரம். ஒரு மலையாளப் படத்தின் ரீமேக் இந்தக் 'காசி'. கலாபவன் மணி என்ற மலையாள நடிகர் நடித்திருந்த வேடத்தைத்தான் தமிழில் விக்ரம் ஏற்றிருந்தார். மணி ஒரு மிமிகிரி நடிகர். அவரால் பார்வையற்றவர்களைப் போல் மிமிக்ரி பண்ணி பேசமுடிந்ததே தவிர விக்ரம் அளவுக்கு நடித்து, வாழ்ந்து காட்டவில்லை. இதனால் தான் கேரளமாநில சிறந்த நடிகர் அவார்டு மோகன்லாலுக்கு



கொடுக்கப்பட்டது. மணிக்கு சிறப்பு விருது என்று கொடுத்தார்கள். இதைத் தாங்காமல் மணி மேடையிலேயே மயக்கமடைந்து விட்டார் என்பது நினைவில் கொள்ள வேண்டிய தகவல். விக்ரமின் காசியைப் பார்த்து கேரள சூப்பர் ஸ்டார்கள் வியப்படைந்து பாராட்டி இருக்கிறார்கள். அளப்பரிய ஆற்றல் படைத்த இளைய தலைமுறை நடிகர்களில் ஆரோக்கியமான போட்டியுடன் வளர்ந்து கொண்டிருக்கும் விக்ரம் கடந்த ஆண்டின் 'சிறந்த நடிகர்' என்று 'தேவி' தீர்ப்பு அளிக்கிறது.




தீர்ப்பு இன்னும் முடிவடையவில்லை. சிறந்த நடிகர் என்ற சிறப்புமிகு விருது நந்தாவுக்கு வழங்கப்படாவிட்டால் நிறைவுபெற முடியாது! சூரியா இளங்காலைப் பொழுது கதிரவனாகவும் அந்தி மறையும் சூரியனாகவும் பார்ப்பதற்கு மட்டுமே அழகானவர் சூரியா என்று இவர் அறிமுகமானபோது சிலர் பேசினார்கள். தனித்து நிற்க முடியாது. இன்னொரு நாயகனுடன் இணைந்து நின்றால் தான் திரை உலகில் நீடிக்க முடியும் என்று சில வக்கிர மனங்கள் ஆருடம் சொன்ன கதை எனக்குத் தெரியும். குறிப்பிட்ட கரக்டர்கள் மட்டுமே சூரியாவுக்குப் பொருந்தும். அவரால் செய்ய முடியும் என்று முத்திரை குத்த பார்த்தவர்களுக்கு 'நந்தா' இடியென அடியை இறக்கிவிட்டான். திறமைகள் புதைந்திருக்கும் அட்சய பாத்திரம் சூரியா. அரும்புகின்ற பருவத்தல் இருக்கும் சூரியா - விக்ரம் இருவரும் மிகவும் கடினமான பாத்திரங்களை ஏற்று அந்த காரக்டர்களாகவே வாழ்ந்து காட்டியிருப்பது என்பது எளிதானதல்ல!


(தொடரும்)


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்

விருது பெற்ற

VIVEKA

PRINTERS




உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்.

80 BARBADOS BLVD., UNIT #4

SCARBOROUGH, ONT. ☎:(416) 410-6401

# அன்புத் தமிழ்



- கவிஞர் வி. கந்தவனம்

## முதலிரவு

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருதநிலம் நீர்வளமும் நெல்வளமும் உடையது. மக்களுக்குச் செல்வச் செழிப்பு அதிகம். அதனால் ஓய்து நேரமும் அதிகம். ஓய்வு நேரங்களில் பலவகையான விழாக்கள். விளையாட்டுக்கள் போன்றவற்றில் மருதநிலத்தவர் ஈடுபடுவர்.

சில வேளைகளில் பழைய நல்ல கதைகள் சொல்லி மகிழ்வதும் உண்டு. கதைகளிலே சிறந்தது காதல் கதை. அதுவும் சொந்த அனுபவத்தோடு கூடிய கதை எனில் எவ்வளவு சுவையாக இருக்கும்? தலைவன் ஓர் அழகான பெண்ணைக் காதலித்தான். காதலைத் தொடர்ந்து கல்யாணம் நடைபெற்றது. கல்யாணம் முடிந்ததும் முதலிரவு.

கல்யாண வைபவத்தையும் முதலிரவு அனுபவத்தையும் எவராவது மறப்பார்களா. என்ன? அந்த மறக்க முடியாத இன்ப நிகழ்ச்சியைப் பின்வருமாறு ஒரு கதை;யாக வீட்டுக்கு வருகை தந்திருந்த தனது நண்பன் ஒருவனுக்குச் சொல்லி மகிழ்கின்றான் தலைவன்:

'உழுத்தப் பருப்பை அதிகம் சேர்த்துச் சமைத்த பொங்கல் குழையலை வந்தவர்கள் சுவைத்துக் கொண்டு இருந்தார்கள். வரிசையாக மரக்கால்கள் நட்டுப் பெரிய பந்தர் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் தரையிலே மணல் பரப்பப்பட்டிருந்தது. மனை விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக எங்கும் மாலைகள் தொங்கவிடப்பட்டன.

'கோள்களின் தீமைகள் நீங்கிய வளைந்த வெண் சந்திரனை. கேடற்ற சிறந்த புகழையுடைய உரோகிணி நட்சத்திரம் வந்தடைந்தது. அந்த நல்ல நாளிலே கடிய இருளும் மறைந்து பொழுதும் புலர்ந்தது. அவ்வேளை உச்சியிலே, நீர்க் குடங்களைத் தாங்கிய பெண்களும் கைகளிலே மண் கலயங்களை ஏந்திய மகளிரும் மணத்தினை ஆரவாரத்துடன் செய்து வைக்கும் முதிய செம்மனப் பெண்டிரும் கூடினர். முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் அவர்கள் முறை முறையாகத் தந்துகொண்டு நின்றனர்.

'புதல்வரைப் பெற்ற மகளிர் நால்வர் கூடினர். தேமல் படர்ந்த அழகிய வயிற்றினையும் தூய ஆபரணங்களையும் அணிந்த அம் மகளிர், 'கற்பினின்றும் வழுவாது, நன்றாகிய பல வழிகளிலும் உதவியாக இருந்து. நின்னை மனைவியாகப் பெற்று நின் மணவாளனைப் பேணிக் காக்கும் துணைவியாக நீ இருப்பாயாக' எனக் கூறி அவளை வாழ்த்தினர். குளிர்ச்சி பொருந்திய பூவிதழ்களையும் நெல்லினையும் நீரோடு கலந்து அவள் தலையிலே தூவினர். அவை அவளது கருமை மிகுந்த கூந்தலிலே ஒருங்கே சேர்ந்து விழுந்தன. அவ்விதமாக அவளை மங்கல நீராட்டி வதுவை மணத்தை நடத்தி முடித்தனர்.

'அதன் பின்னர். சுற்றத்தவர் எல்லோரும் மகிழ்ச்சி ஒலியினராய் விரைந்தெழுந்து. 'பெருமைக்குரிய இல்லக் கிழத்தி ஆவாயாக' என அவளை எனக்குத் தந்து மனைவியாக்கினர்.

'அதனைத் தொடர்ந்து, ஒரு தனி இல்லத்திலே எமது புணர்ச்சிக்குரிய முதல் இரவு வேளையும் வந்தது. முதுகினை வளைத்துக் கொண்டு அவள் புதுப் புடவைக்குள்ளே ஒடுங்கிக் கிடந்தாள். அவள் கிடந்த மலர்ப்படுக்கையை அணுகி அவள் முதுகினைத் தழுவினேன். அவளைப் புணரும் விருப்போடு அவள் முகத்தை மறைத்திருந்த கைகளை மெதுவாக விடுவித்தேன். அவள் அஞ்சி மூச்செறிந்தாள். அவ்வேளை. 'நின் மனத்திலே எண்ணியிருப்பதை ஒளியாமல் உரைப்பாயாக' என்று கேட்டேன்.

'கேட்டதும் இன்பம் சேர்க்கும் அம் மலரணையிலே. மாமை நிறத்தையுடைய அவள், மானின் மடப்பமும் செறிந்த நோக்கும் உடைய கண்கள், குளிர்ந்த தன் கூந்தலில் மறைந்த சிவந்த மணிகள் பதிந்த ஒளிபொருந்திய குழையோடு கூடிய காதின் ஓரம் சென்று அசைய, உள்ளத்திலே பொங்கி எழும் உவகையள் ஆகி முகத்தினை எனது பிடியிலிருந்து விலக்கி ஒய்யெனத் தலை கவிந்தனள்!'


(தொடர்ச்சி அடுத்த இதழில்)

14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 127**



**இடமிருந்து - வலம்**
1. திருப்தி செய்
4. பாண்டிய அரசன்
5. நுனி
6. ஈரம் உலர்த்தும் துணி
7. வீட்டின் பின்புறம்
8. அடையாளம் இடு
9. காலின் ஒரு பகுதி
12. வெற்றிலையுடன் பாவிப்பது
14. சிற்பம்

**மேலிருந்து - கீழ்**
1. மனங்கவரப்படு
2. வாங்கின விலை
3. சீர்படுத்து
4. உபாயம் செய்தல்
7. சிறிது சிறிதாக உண்
9. கொத்து (கீழ் - மேல்)
10. தோற்றம்
11. இந்திய ரூபாயின் பதினாறில் ஒரு பங்கு
12. முறம் (கீழ் - மேல்)
13. தூளான மண் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் FEBRUARY 24, 2002க்கு முன்வர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ழு | த் | தா | ணி | | ஞா | னி |
| ஞ் | | | து | ரு | வி | | |
| ஞா | ல | ம் | | ஊ | ழி | ய | ம் |
| ன் | | | ம் | | | | ல |
| று | | | ர | | பு | ப் | கா |
| ம் | ம | ர | கி | | தை | | ர் |
| | | | க் | | ய | | தி |
| பு | ப் | டு | உ | | ல் | ழி | எ |

**126இல் வெற்றி பெற்றோர்**
1) R.K. Senthilruban, Scar., Ont.
2) த. திலகேஸ்வரி, Scar., Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்


*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**

YARL **WINDOW COVERING**
*1530 WARDEN AVENUE*

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.



*CUSTOM MADE....*
* *VENETIAN BLINDS*
* *VERTICAL BLINDS*
* *ROLLER BLINDS*
* *PLEATED SHADES*
* *DRAPERIES*

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு: என். செல்வம்
*(416) 383-0205*
*(416) 650-0377*

*FREE ESTIMATE*

# விண்வெளி

- தருபவர் - கனி

**அந்நியர்கள்:- 76**



இன்று நாம் கொண்டிருக்கும் விஞ்ஞான அறிவுக்கு ஏற்ப நமது கிரகத்தை விட்டு வெளியே சென்று ஏலியனிகளைக் காண. அறிய முடியுமா எனப்பார்ப்போம். முதலில் நாம் அறிந்துள்ள பௌதீக விதிகள் எல்லாம் பிரபஞ்சம் முழுவதும் - கருத்து வாரம் எனப்படும் Black Hole தவிர - பொருந்தும் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுவோம். மேலும் பிரபஞ்சம் முழுவதுமே ஈர்ப்பு விசையினால் கட்டுப்பட்டுள்ளது என்பதனையும் அறிவோம். இவற்றை விட இப்பிரபஞ்சத்திலேயே மிகவும் வேகமாகச் செல்லக் கூடியது ஒளி என்பதையும் கருத்திற் கொள்வோம்.

எமது சூரியக் குடும்பத்தில் பூமி தவிர எந்தவொரு இடத்திலும் உயிரினம் இல்லை என்பது விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக நாம் அறிந்தது. எனவே எமது தேடலானது சூரியக் குடும்பத்துக்கு வெளியே ஆகிறது. எமது சூரியனுக்கு மிகவும் அருகில் இருக்கும் அடுத்த நட்சத்திரத்தின் தூரம் 4½ ஒளியாண்டுகள் ஆகும். அதாவது ஒளியின் வேகத்தில் பயணப்பட்டால் 4½ வருடத்தில் நமக்குக் கிட்டிய தூரத்தில் உள்ள நட்சத்திரத்தை அடையலாம். ஒளியின் வேகத்தில் செல்லக் கூடிய எந்தவொரு விண்கலமும் எம்மிடம் இல்லை. இப்போது எமது தொழில்நுட்ப அறிவுக்கு ஏற்ப அமைக்கப்பட்ட விமானங்களின் உதவியுடன் இந்தப் பயணத்தை அமைத்துக் கொள்வோமேயாயின் நமக்குக் கிட்டவாக உள்ள நட்சத்திரத் தொகுதியை அண்மிக்க 4 மில்லியன் வருடங்கள் எடுக்கும் என்பது கணிப்பு. எனவே எமது பயணத்திற்குத் தூரமும் பயணக்கதியும் பிரச்சனையாக உள்ளது. அடுத்து பயணத்திற்குத் தேவையான எரிபொருள். ஒளியின் வேகத்தில் செல்லக் கூடிய விண்கலம் ஒன்றை நிர்மாணிக்க முடியும் எனக் கொண்டு அவ்விண்கலம் அண்மையில் இருக்கும் நட்சத்திரத் தொகுதியிற்குச் செல்லத் தேவையான எரிபொருளின் சக்தியானது எவ்வளவு எனக் கணிப்பிட்டால் அது சுமாராக அமெரிக்கா முழுவதும் ஒரு வருடத்தில் பாவிக்கும் சக்தியின் 40,000 மடங்கு எனக் கூறுகின்றார்கள். எனவே விண்வெளிப் பயணத்தின் மூலமாக ஏலியன்களைக் கண்டறிவதில் உள்ள பெரும் சிக்கல்களான, தூரம், விண்கலத்தின் கதி, எரிபொருள் என்பவற்றைக் கருதும் போது அது முடியாத ஒன்றாகவே உள்ளது. இது கற்பனையில் அமைந்த விஞ்ஞானப் படங்கள் - திரைப்படங்களில் மாத்திரமே சாத்தியமாகும் என்பது விஞ்ஞானிகளின் கூற்று. இவற்றைவிட வேறும் சில சுவாரசியமான பௌதீகச் சிக்கல்களும் உண்டு. இவற்றையும் பார்ப்போம்.

சுமாராக ஒளியின் வேகத்திற்குச் சமமான, அதாவது 99.99 வீதம் ஒளியின் வேகத்தில் செல்லக் கூடிய விண்கலம் ஒன்றினைச் செய்து அதில் நமக்குக் கிட்டவாக உள்ள நட்சத்திரத் தொகுதிக்குப் பயணித்து மீண்டும் நமது பூமிக்கு ஒருவர் வருகின்றார் எனக் கருதுவோம். இதற்கு அவருக்கு எடுக்கும் மொத்தப் பயண நேரம் 10 வருடங்கள் ஆகும். அதாவது அந்த விண்வெளிவீரர் தமது 30 வது வயதில் பயணத்தை ஆரம்பித்து இருந்தால் மீண்டும் பூமியை வந்து அடையும் போது அவரது வயது 40ஆக இருக்கும். ஆனால் பூமியைப் பொறுத்த வரையில் அந்த 10 வருடப் பிரயாண காலத்தில் 8000 வருடங்களைக் கடந்திருக்கும். இதனைப் பின்வருமாறு கூறுகின்றேன்.

2000ஆம் ஆண்டு ராஜா என்ற விண்வெளி வீரர் பூமியில் இருந்து விண்கலம் ஒன்றில் ஒளியின் வேகத்தில் 99.99 வீதத்தில் தமது 30வது வயதில் பயணிக்கின்றார் என்போம். அவர் எமது சூரியக் குடும்பத்திற்கு அண்மையில் இருக்கும் நட்சத்திரத் தொகுதிக்குச் சென்று திரும்புகிறார் என்போம். இதற்காக அவர் பயணித்த காலம் 10 வருடங்கள். எனவே பூமிக்குத் திரும்புகையில் ராஜாவின் வயது 40 ஆகும். ஆனால் பூமியோ அப்பொழுது 10.000ஆம் ஆண்டில் இருக்கும். அதாவது ஒளியின் வேகத்தில் 10 வருடம் ராஜா பயணித்த அதே காலப் பகுதியில் பூமியானது 8000 ஆண்டுகளைக் கடந்திருக்கும். ராஜா திரும்பி வரும்போது தன்னை அனுப்பியவர்களைக் காணமுடியாது. தனது குடும்பம். உறவினர்கள் என எவரையுமே காணமுடியாது. நாகரிகத்தல் முன்னேறிய வேறு ஒரு காலம் பகுதி மக்களையே சந்திப்பார்.

இது ஏனெனில் ஒளியின் வேகத்தில் பயணிக்கும் போது நேரம் மெதுவாகச் செல்கின்றது. 1905ஆம் ஆண்டு அயன்ஸ்ரைன் தமது சிறப்புச் சார்புக் கொள்கையின் மூலம் இதனை நிறுவிக் காட்டினார்கள். ஒளியின் வேகத்தில் பயணிப்பதில் உள்ள பெரும் பௌதீகச் சிக்கல் இது. சரி. ஒளியின் வேகத்தை விட கூடுதலான வேகத்தில் பயணித்தால் என்ன நடக்கும்? மறுமுறை சந்திக்கும் போது இதனைப் பார்ப்போம்.


Neelam SILK

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்


முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்


2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- VASUNTHARA NETWORK CREPE
- SONALIKA PURE SILK
- JAIPUR CRYSTAL SILK

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம்





சில்க்

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)

☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)



நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு

பாதிக்கப்படும்

- ACCIDENT INJURIES
- CRIMINAL
- DOG BITES
- SLIP & FALL

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன்

416-490-9199

# தூறல்

## காற்றுக்கென்னவேலி

கவிதைத்துவமான தலைப்புடன், மூன்று வருடகாலம் சென்சாரின் காத்திருப்பு, ஒத்திவைப்பு! பின்னர் வெளிவந்துள்ளது.



இந்தியக் கரையை அடையும் போராளிப் பெண்ணிற்கு சிகிச்சையளிக்க மறுக்கும் வைத்தியர். பின்னர் அதே பெண் மீதே காதல் கொள்கிறார். அவளை மீண்டும் இக் கரைக்கும் அனுப்பி வைக்கிறார். சில வருடங்களுக்கு முன்னர் "Terrorist" என்னும் ஆங்கிலத் தலைப்புக் கொண்ட தமிழ்த் திரைப்படம., பல திரைப்பட விழாக்களில் பரிசுகளை வென்றதுடன், பணத்தையும் அள்ளி இறைத்தது. அதே இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து மற்றொரு படம்.

இதிலும் அதிலும் பெண் போராளியே கரு. Terroristஇல் கொச்சைப்படுத்தப்பட்டவள் இங்கு கவித்துவமாக்கப்படுகிறாள். இவ்விரண்டு படத்துக்கும் பார்வையாளர்கள் தமிழ்நாட்டு மக்கள். நடிகர்கள். தொழில்நுட்பக் கலைஞர்கள். இந்தியர்கள். இயக்குனர். கதாசிரியர். இந்தியர்கள். இவர்கள் கொண்டு செல்லும் தளம். Terrorostஇல் வெளிநாடுகள். திரைப்பட விழாக்கள. 'காற்றுக்கென்னவேலி'இல் தமிழ்நாட்டு மக்கள். புலம் பெயர் தமிழர்கள்.

இதுவரை காலமும் வெளிவந்த திரைப்படங்களில் போராளிகள் - பயங்கரவாதிகளாகவே காட்டப்பட்டார்கள். உதாரணம் மணிதரத்தினத்தின் 'ரோஜா', பாலச்சந்தரின் 'புன்னகை மன்னன்', சந்தோஷ் சிவனின் 'Terrorist' எனத் தொடர்கிறது. போராளி ஒரு மனிதாபிமானி கவிதையை இரசிக்கும் தன்மை கொண்டவன் என அவனை மனிதனாகக் காட்டுகிறது இப்படம்.

எமது பிரச்சினைகள், தமிழ்த்திரைப்படங்களில் நகைச்சுவைக்கும் கேலிகளுக்குமே பயன்படுத்தப்பட்டன. உதாரணம் 'தெனாலி', 'புன்னகை மன்னன்' போன்றவை. இதில் வரும் குஷ்புவின் பாத்திரம் முக்கியமானது. போரளிப்பெண் தனக்குக் கால் தேவை என்பதை வலியுறுத்தும் காரணம் - குஷ்பு. அழுத்தமாகவும் அழகாகவும் இக் கொடுரம் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் இடைத்தரகராக செயல்படும் சுந்தரமூர்த்தியின் பாத்திரம் - ராஜீவ் கொலை வழக்கில் தூக்கில் தொங்கிய (?) நபரை ஞாபகப்படுத்துகிறது.

டொக்டராக வரும் சிறீமன் மிகவும் சிறப்பாக செய்துள்ளார். போராளிப் பெண்ணாக வரும் சுஜீதா இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம். தாதியாக வரும் டயானா கவர்ச்சி நடிகையாகப் பல படங்களில் நடித்தவர். காத்திரமாகச் செயல்பட்டுள்ளார்.

படத்தின் அடுத்த தளம் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்குமானது. 18 வருடங்களாக இலங்கையில் பட்ட துன்பங்களைவிட, 18 நாட்களில் இக் கரையில் (தமிழ் நாட்டில்) பட்ட துன்பங்கள் கொடுரமானது. கூர்மையான வசனம் சற்று அதிகமாகவே கூறப்பட்டதாகத் தெரிகிறது. இலங்கை அரசை விடவா. தமிழ்நாட்டு அரசு கொடுரமானது? "இந்தி மண்ணில் இறப்பதை விட, எமது மண்ணில் இறப்பதே மேல்" - போராளிப் பெண் கூறும் வசனம். "அம்பலம்" - web தளத்தில் இதைப் பற்றி குறிப்பிட்டு "இங்கே குத்தி இங்கே வாங்கனது போல்" - என விமர்சனம் ஒன்றும் வைக்கப்பட்டது. எந்த ஒரு போராளியும் தான் போராடும் மண்ணில் இறப்பதே மேல் என நினைப்பார்கள். இது கூடவா அம்பலத்துக்கு தெரியாமல் போய்விட்டது.

அரசுக்கும் மக்களுக்குமான இடைவெளி தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அரசாக செயல்படும் காவல் படையினர், போராளிக்கு எதிராகவே செயல்படுகிறார்கள். மக்கள் ஆதரவாக செயல்படுகிறார்கள். (தாதி, டாக்டர், சுந்தரமூர்த்தி, கூர்க்கா....) இவ்வளவு தெளிவு இருந்தும் அம்பலத்தின் தெளிவின்மை ஆச்சரியமாகவே உள்ளது. மற்றொரு தளத்தில் அரசியல் வாதிகள் விமர்சிக்கப்படுகிறார்கள். 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' எனக் கோஷமிடுபவர்கள் அல்ல நாங்கள். மனிதர்களை நேசிக்கிறோம். அழுத்தமான வசனம் - விமர்சனம்.


**COMPUTER REPAIR & INSTALLATION**

* REPAIR

* SOFTWARE INSTALLATION
* SETUP HOME NETWORK
(hardware not included ($49.99)

* HARDWARE INSTALLATION
(You buy the parts we install it)
* SOUND CARD ($14.99)
* NETWORK CARD ($14.99)
* MODEM CARD ($14.99)
* MEMORY ($14.99)
* VIDEO CARD ($14.99)
* CD ROM ($14.99)
* HARD DRIVE ($14.99)
* CDR-RW ($14.99)
* AND MUCH MORE

PLACE: 720 KENNEDY ROAD
(KENNEDY & EGLINTON)
T.P: 416-265-2319

**J.A.B. TRAVELS & TOURS**

JAB
IATA
ATAC MEMBER

Top Sales Award for Cathy pacific

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்
J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 MISSISSAUGA ONT. ☎: (905) 896-8320
2390 Eglinton Ave. E., #211, Scarborough, Ont. ☎: (416) 759-3533

**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை
- சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week -$60.00

தினசரி நடவடிக்கைகள்:-
* உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033

151 Lamareaux Dr., TownHouse 99A
(Finch/Birchmount) தொடர்புகளுக்கு: Mrs. S. J. சௌந்தரநாயகம்


எந்தவித மசாலாத்தன்மையுமற்று எடுக்கப்பட்டுள்ளது. Terroristஇல் போராளிப் பெண்ணுக்கும், போராளி ஆணுக்குமிடையிலான உறவு - அவர்கள் பலவீனமானவர்களாக காட்டுகிறது. ஆனால் இதில் வரும் சக்திகுமார் போராளிக்குரிய சிறப்பான குணங்களைக் கொண்ட பலவீனமற்றவர் எனக்காட்டுகிறது. திரைக்கதை, சீரானதாகவும் தெளிவாகவும் உள்ளது.



தமிழ்நாட்டிலிருந்து தமிழ்நாட்டு அரசையே விமர்சித்து, இலங்கைத் தமிழ் மக்களது உணர்வுகளுக்காக எடுக்கப்பட்டுள்ளது. இப்படம் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் புகழேந்தி தங்கராஜ். பாராட்டுக்கள் புகழேந்திக்கு. சிறு நெருடல் இலங்கைத் தமிழையும் இந்தியத் தமிழையும் கலக்காமல் ஒரே தமிழில் சென்றிருக்கலாம். குஷ்பு - இந்தியத் தமிழிலும் (ஆமா) சுஜிதா இலங்கைத் தமிழிலும். இலங்கைத் தமிழ் சற்று அந்நியமாகப்பட்டது.

-வானரன்-


## சொக்கலிங்க பாகவதர் இறந்துவிட்டார்

சம்பூர்ண மகாபாரதம், ரம்பையின் காதல், வீடு, ஜென்டில்மேன், இந்தியன், சதிலீலாவதி போன்ற பல படங்களில் நடித்தவர். ஆரம்ப காலங்களில் பல நாடகங்களில் நடித்தவர். இவருடன் நாடகங்களில் பின்னாளில் பெயர் பெற்றவர்கள் M.G.R., தியாகராஜா பாகவதர், பி.யூ சின்னப்பா போன்றோர். மத்திய அரசின், தேசிய விருதும் மாநில அரசினால் வீடும் பெற்று கௌரவிக்கப்பட்டவர். அவரது இழப்பு தமிழ்த் திரையுலகில் வெற்றிடமாகவே தொடரப் போகிறது. அவரது குடும்பத்தினருக்கு எங்களது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# நியூ சங்கர் அன்கோ

**MONEY TRANSFER**


- வவுனியா
- மன்னார்
- திருகோணமலை
- யாழ்ப்பாணம்
- கொழும்பு
- சென்னை
- ஐரோப்பிய நாடுகள்



- Rice Cooker (Panasonic)
- Roti Maker
- Sumith Grinder
- Ultra Grinder
- Steamer
- Cook Wear Set
- Pressure Cooker
- Milk Boiler



- புதிய பழைய பாடல்கள், படங்கள் V.C.D, DVD இல் பெற்றுக் கொள்ளலாம்.
- புதிய பழைய இடைக்கால பாடல்கள் Audio Cassette, C.D இல் பெற்றுக் கொள்ளலாம்.
- கர்நாடக இசைக் கச்சேரிகள். வயலின், புல்லாங்குழல், தவில், நாதஸ்வர கச்சேரிகள்.




- திருமுருக கிருபானந்தவாரியர் சொற்பொழிவுகள் (மகாபாரதம் 10 Vol.) (இராமாயணம் 8 Vol.) சகலதும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

* Video Transfer - Any System to Any System
* All Celebrations - VHS to DVD Transfer Avail.
* Citizen, Seiko and Different Colour Cover Watches Avail.
* Fancy Item (New Style)
* Gift Item - Toys
* New Born Gift Item



**திருமணப் பெண் அலங்காரம்**

* Hair Style. சாறி பிளீட் பண்ணிக் கொடுத்தல்
* சடை நாகம்
* மாலை - ஆண்டாள் மாலை
* பூச்செண்டு, கிறிஸ்தவ Veil வாடகைக்குக் கொடுக்கப்படும்.



New Shankar & Co.
2365 Eglinton Ave., Scar.
☎ (416) 750-2371


# நிதியும் மூலதனமும்

* RRSP இன் கடைசி நாள் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆகும். ஆகவே இறுதிவரை பொறுத்திராது உங்கள் Contribution ஐ முதலே செலுத்துவதால் நீங்கள் கடைசிநேர நெருக்கடியை (Rush)ஐத் தவிர்க்க முடிகிறது.

* நீங்கள் ஒரே தொகையாக வருடத்தில் ஒரு நாள் கட்டுவது சிரமமாக இருந்தால் ஒவ்வொரு மாதமும் ஒரு சிறிய தொகையை RRSP எடுக்கும் படியாக உங்கள் வங்கியுடன் ஏற்பாடு செய்யலாம். இத்தகைய முயற்சியே மிகமிகச் சிறந்ததாக கருதப்படுகிறது.

* எத்தனை வயதிற்குட்பட்டவர்கள் RRSP இல் பணம் செலுத்தலாம் என்று கேட்பீர்களாயின் - அதற்கு வயதெல்லையே கிடையாது. அதாவது எவராவது கனடாவில் இருந்து அவர் உழைத்து பின் வருமான வரிக்கு அனுப்பி (Files For Tax Returen) இருப்பாராயின் அவர் எந்த வயதாயிருப்பினும் அவருக்கு RRSP போடும் வசதி உண்டாகிறது.

* அதாவது உள்நாட்டு பேப்பர் போடும் சிறுவனுமே தகுதிபெற்றவன். அதாவது சிறுவயதில் ஆரம்பிப்பதே மிகமிகச் சிறந்ததாகும். ஏனெனில் கூட்டுவட்டிக்கு (Compound Effect) வட்டியாக வளர்ந்து நாளடைவில் மிகக் கூடிய தொகையை எட்டுகிறது.

<u>..போது Spousal RRSP ஐப் பற்றிச் சிறிது அறிவோம்.</u>

உங்களுடைய மனைவிக்கோ அல்லது கணவனுக்கோ RRSP இல் பணம் செலுத்துவதாகும்.

* இது யாருக்கு பொருத்தமெனில் எவர் கூடுதலாக பணம் உழைக்கிறாரோ அடுத்து அவருடைய கணவனோ அல்லது மனைவி உழைப்பு இல்லாமலோ அல்லது குறைந்தளவு ஊதியத்தைப் பெற்றால் கூடுதலாக ஊதியம் பெறும் வீட்டுக்காரர் தன் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ Spousal RRSPஐ எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

* இதில் நன்மை என்னவெனில் உதாரணமாக கணவன், மனைவிக்காக RRSP இல் பணம் போடும் போது, கணவனுக்கே RRSP Tax Receipt கிடைக்கிறது. அவர் தன்னுடைய வருமானத்திலிருந்து கழிக்கலாம்.

* ஆனால் மிக முக்கியமாக ஒன்று கவனிக்க வேண்டும். என்னவெனில் - மேல் உதாரணத்தில் மனைவி கஷ்டம் காரணமாக தன்னுடைய RRSP இல் பணத்தை அறவிட வேண்டின் அப்பணம் கணவனுக்கே அது வருமானமாக கணிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்க வேண்டின் மனைவியானவள் கணவன் RRSP ஐ போட்ட நாளில் இருந்து 3 வருடம் பொறுத்துப் பணத்தை அறவிட நினைத்தால் பின்பு அப்பணம் மனைவிக்கே வருட இறுதியில் வருமானமாக காட்ட நேரிடுகிறது.

*ஆனால் ஒன்று Spousal RRSP இல் பணம் செலுத்தும் போது அரசாங்கம் (Calender Year) Not Tax Year வருடக் கணிப்பை தை முதல் மார்கழி வரையே கணிக்கிறது. நீங்கள் Spousal RRSP இற்கு வருட முதல் 60 நாட்களில் போட்டால் இன்னும்*
*1 வருடம் கூடுதலாக பொறுத்திருக்க வேண்டும்.*

